| அரையாண்டுத் தேர்வு - 2024 | | தேர்வு எண் |
|---|---|---|
| காலம் : 3.00 மணி | XII - தமிழ் | மதிப்பெண் : 90 |

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (14x1=14)

2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. தண்டியலங்காரம் ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது
அ) வீரசோழியம் ஆ) காவியதர்சம்
இ) முத்துவீரியம் ஈ) நன்னூல்

2. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) ஊர்வலம் ஆ) இலக்கியம்
இ) விண்மீன் ஈ) காவியம்

3. இந்தியாவின் முதல் பொது நூலகம்
அ) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்
இ) மறைமலையடிகள் நூலகம் ஈ) கன்னிமாரா நூலகம்

4. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது
அ) மெய்ப்படிமம் ஆ) வினைப்படிமம்
இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்

5. 'வெங்கதிர்' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

6. மகரயாழ் எத்தனை நரம்புகளைக் கொண்டது
அ) 16 ஆ) 21
இ) 7 ஈ) 17

7. 'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப' என்பது ______ பாவிகம்
அ) மணிமேகலை ஆ) கம்பராமாயணம்
இ) சிலப்பதிகாரம் ஈ) வளையாபதி

8. வெண்பாவின் ஓசை
அ) தூங்கல் ஆ) துள்ளல்
இ) செப்பல் ஈ) அகவல்

9. 'தன்மனை' என்பது ______ இல்லம்
அ) தந்தையின் ஆ) மனைவியின்
இ) உடன்பிறந்தானின் ஈ) கணவனின்

10. திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

11. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதக மண்டலம் ஆ) திண்டிவனம்
இ) விழுப்புரம் ஈ) தருமபுரி



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
அ) சடாயு, இராமன்
ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன்
ஈ) இராமன், சவரி

13. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி யாது?
அ) குறியீடு
ஆ) படிமம்
இ) அங்கதம்
ஈ) தொன்மம்

14. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) தொல்காப்பியம்
ஆ) நன்னூல்
இ) தண்டியலங்காரம்
ஈ) யாப்பெருங்கலக்காரிகை

## பகுதி -2 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.
16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
18. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

## பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் நூல் பற்றி குறிப்பு வரைக.
20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
21. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.

## பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

22. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
அலை, அளை, அழை

23. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***
அ) அறிந்து
ஆ) பேசுவார்

24. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.***
அ) இனநிரை
ஆ) தலைக்கோல்

25. ***கலைச்சொல் தருக.***
அ) Metro Train
ஆ) Passport

26. ***தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.***
ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன

27. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***
நிலத்தக் கௌறணும்டா அப்ப தான் வகுறு நிறையும்.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.*
சங்க காலத்தில் கணச் சமூகத்துக்கு தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய் வழியாகவே குலதொடர்ச்சி குறிக்கப்பட்டது.

29. விடியல், வனப்பு - இருசொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.

30. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

**பகுதி - 3 (பிரிவு - 1)** *(2x4=8)*

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.

33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

34. அறிவுடை வேந்தனின் நெறிகுறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

**பிரிவு - 2** *(2x4=8)*

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38. மயிலை சீனி, வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

**பிரிவு - 3** *(3x4=12)*

*குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*

39. பொருள் வேற்றுமை அணியை விளக்குக.

*(அல்லது)*

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***

40. ***இலக்கிய நயம் பாராட்டுக.***
***(மையக்கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக.)***

'பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!'

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

41. ***பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.***

1) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

*(அல்லது)*

2) குன்றின் மேலிட்ட விளக்கு போல



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

43. ***தமிழாக்கம் தருக.***

Popular as the cultural capital of India. Tamilnadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well known and outstanding Tanjore paintings that flowurished at the time of Chola dynasty in ancient Tanjaore. In this traditional art from, the paintings showcase the embelished from of the sacred deities of the region deities in the paintings are festooned with class pieces peaxls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals floral motifs and birds as muses.

## பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.*** ***(3x6=18)***

44. அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

*(அல்லது)*

ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும்பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. அ) நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - 5

47. ***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.*** ***(4+2=6)***

அ) "ஒருமையுடன் நினது திருமலரடி" - எனத் தொடங்கும் தெய்வமணிமாலைப் பாடல்.

ஆ) "நன்று" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com